[1991 செப்டம்பர் 1]

18—

கள்ளிகுளத்தில் தொழிற்கூடம்

*49. திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ராதாபுரம் தொகுதி கள்ளிகுளத்தில் தொழிற் கூடம் அமைப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. முகமது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ).

இராதாபுரம் வட்டத்தில் வசிப்பவர்கள் பெரும்பாலோர் விவசாய கூலிகளாகவும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர் களாகவும் தேவையான தொழில் அனுபவம் இல்லாமல் இருக்கிறார்கள். தொழிற்பேட்டை துவங்குவதற்குத் தேவை யான அடிப்படை வசதிகள் மற்றும் தகுதியான நிலம் கூட அங்கு இல்லை. இந்நிலையில் தொழிற்பேட்டை ஒன்று அங்கு துவங்கப்படுமாயின் அது ஒரு வெற்றிகரமான திட்டமாக அமை யாது எனக்கருதி இத்திட்டம் கைவிடப்பட்டது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராதாபுரம் தொகுதி மிகவும் வறுமை கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களை பெருவாரியாகக் கொண்ட தொகுதி, பல்வேறு அடிப்படை வசதிகள் கூட அங்கே இல்லை என்று அமைச்சர் குறிப்பிட்டு, அதை வெற்றி கரமாக அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். மிகவும் பின்தங்கிய பகுதியாக அது இருக்கின்ற காரணத்தினாலே யும் பனங்கொம்பு, வாழை நார், சுண்ணாம்பு, செண்டுகள் தயாரிப்பதற்கான பூக்கள் எல்லாம் அங்கே விளைகின்ற காரணத்தினாலேயும் இப்படிப்பட்ட தொழில்களை மேம் படுத்துவதற்கு அரசு முன்வந்தால்தான், அப்பகுதி ஏதாவது ஒரு முன்னேற்றம் ஏற்பட்டு அப்பகுதி வாழ்மக்களுக்கு வருவாய் பெருகி வறுமை கோட்டிற்கு கீழே வாழ்கின்ற நிலைமாறும் என்கிற காரணத்தினாலேயும் இதை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு— நாங்கள் நிலம் தர முன்வந்து, அது ஏற்கெனவே கவர்னர் ஆட்சியிலே தயார் நிலைப் படுத்தப்பட்டிருந்தது ஆகவே அதை மீண்டும் பரிசீலித்து உத்தரவிடவேண்டும் மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உத்தரவிடப்படுமா என்று கேளுங்கள்.

HON. THIRU MOHAMED ASIF: Hon'ble Speaker Sir, in this regard SIDCO is on the look out for a suitable land at Valliyur, Venkatapuram, Nanguneri Taluk for the formation of Industrial Estate. If the above proposal is materialised the Enterpreneurs of Nanguneri Taluk, Radhapuram Taluk and the Enterpreneurs of Kanyakumari District will be benefited as the above location is nearer to Radhapuram Taluk, Nanguneri Taluk and Kanyakumari District.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, என்னுடைய இந்த அவையிலே எழுகின்ற அவலக் குரலே, இராதாபுரம் தொகுதி மிகவும் பின்தங்கியத் தொகுதி; வறட்சியின் கோரப்பிடியிலே தாண்டவம் ஆடி, விளையாத நிலத்திற்கு வரி கட்டி, ஓடாத மோட்டாருக்கு மின் கட்டணம் கட்டி, என்று பலமுறை குரல் கொடுத்து வருகின்ற தொகுதி. எந்தவிதமான தொழிற்சாலைக்கும் அங்கு வாய்ப்பில்லை. எந்த ஒரு முன்னேற்றம் வேண்டுமென்றாலும், அதிலே கன்னியாகுமரியைக் கொண்டுவந்து இணைக்கிறார்கள். அவர்களுக்குப் பயன்படும்; அவர்களுக்கு பயன்படும் என்று மகேந்திரகிரி ப்ராஜெக்ட், கூடங்குளம் ப்ராஜெக்ட் ஆகிய எல்லாவற்றுக்குமே அலுவலகங்களுமே கன்னியாகுமரி மாவட்டத்திலே தான் வைத்திருக்கிறார்கள். இதை நான் அடிக்கடி கண்டனக் குரலிலே எழுப்பியிருக்கிறேன். ஆகவே, இந்தத் திட்டம் அவர்களுக்குப் பயன்படும் என்பதற்காகக் கேட்கவில்லை. என் தொகுதி மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே—இந்தத் திட்டத்தை கவர்னர் ஆட்சியிலே ஒப்புதல் பெற்றிருந்தார்கள்— அதை எப்படியாவது கள்ளிகுளத்தில் கொண்டுவர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. முகமது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தொகுதியிலே முன்னேற்றம் செய்யாமலும் அடிப்படை வசதிகள் எதுவும் செய்யாமலும் இருக்கிறது என்று சொல்கிற காரணத்தினாலே, அவர்களின் தொகுதிக்கருகே ஒரு இடம் தேடப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அருகிலே ஒரு தொழிற்சாலை அமைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]